SYED AMMAL ENGINEERING COLLEGE
C. No.
20 SEP 2012
1600
LANTHAI, RAMANATHAPURAM-2.

தொழில் நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்

தொழில் நுட்பக் கல்வி ஆணையர்
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்
சென்னை 600 025

பெறுநர்

முதல்வர்கள்,
அனைத்து சுயநிதி பொறியியற் கல்லூரிகள்
மற்றும் பாலிடெக்னிக் / HMCT கல்லூரிகள்

கடித எண். 574 / இசிஏ1 / 2012, நாள்: 14.9.2012

ஐயா,

பொருள்: தொழில் நுட்பக் கல்வி – ஆதிதிராவிடர் நலம் – சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கையில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயிக்கும் கல்வி கட்டணங்கள் போன்றவற்றை வழங்குதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வித் துறை, நாள்:16.4.2010
2) அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.1.2012
3) அரசாணை (நிலை) எண்.63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 25.6.2012
4) அரசாணை (நிலை) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–3) துறை, நாள்: 11.9.2012

---------

பார்வை (2) மற்றும் பார்வை (4)ல் காணும் அரசாணைகள் தொழில் நுட்பக் கல்வித் துறையின் இணையதளத்தில் www.tndte.gov.in வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை (4)ல் காணும் அரசாணையின்படி சுயநிதி பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியர்களுக்கு மைய அரசின் உதவித் தொகை திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் வருமாறு :

| வ. எண். | பொருள் | விவரங்கள் |
|---|---|---|
| 1) | இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதிவாய்ந்த மாணவர்கள் | ஆதிதிராவிடர் (ஆதிதிராவிட அருந்ததியர் உட்பட) / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியர் (தமிழ்நாட்டைச் சார்ந்தவர் மட்டும்) |
| 2) | மைய அரசின் விரிவுபடுத்தப்பட்ட திட்டம் நடைமுறைக்கு வரும் ஆண்டு | 2011–12 கல்வியாண்டிலிருந்து சேர்க்கை பெற்ற தகுதிவாய்ந்த மாணவர்கள் |

| | | |
|---|---|---|
| 3) | எந்த ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற மாணவர் | அரசு ஒதுக்கீடு மற்றும் அரசு ஒதுக்கீடு அல்லாத ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெறும் மாணவர் |
| 4) | எந்த வகை படிப்புகள் (பொறியியற் கல்லூரி பட்டப் படிப்புகள்) | AICTE ஒப்புதல் மற்றும் சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்ற (Affiliated) பொறியியற் கல்லூரிகளில் நடைபெறும் அனைத்து வகை பாடப்பிரிவுகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.<br><br>1) இளநிலை பட்டப் படிப்பு (UG – B.E. / B.Tech. / B.Arch.)<br>2) முதுநிலை பட்டப் படிப்பு (PG – MBA / MCA / M.E. / M.Tech. / M.Arch.)<br>3) இளநிலை / முதுநிலை தொழிற்படிப்பு அல்லாத பட்டப் படிப்புகள் (B.Sc. / M.Sc.) |
| 5) | எந்த வகை படிப்புகள் (பாலிடெக்னிக் கல்லூரி பட்டயப் படிப்புகள்) | AICTE ஒப்புதல் பெற்ற / State Board of Technical Education and Training இணைப்பு பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் நடத்தப்பெறும் அனைத்து வகை பட்டயப் படிப்புகள் |
| 6) | தகுதி வாய்ந்தவர் என சரிபார்ப்பது | 1) தகுதி வாய்ந்த வருவாய்த் துறை அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதிச் சான்றிதழ் (SC / SCA / ST)<br>2) பயன்பெறும் மாணவர்களுக்கு வருவாய்த் துறை அலுவலர் – வட்டாட்சியர் (Tahsildar) அவர்களால் வழங்கப்படும் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானச் சான்றிதழ்<br>3) தகுதி பெற்ற மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம்)த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| 7) | இத்திட்டத்தின் கீழ் எவ்வகையான கட்டணங்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. | திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாய கட்டணங்கள் – Non-Refundable compulsory fee collected from eligible students under this scheme (Enrollment / Registration, Tuition, Games, Union, Library, Magazine, Medical Examination and such other fee compulsory payable by the scholar to the institution or university / board) |

| | | |
|---|---|---|
| 8) | விலக்கு அளிக்கவேண்டிய கட்டணங்கள் | பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் – விலக்கு அளிக்க வேண்டிய கட்டண விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. |

மேற்படி தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து வருவாய்த் துறை அலுவலர் அளித்த ஜாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழை சரிபார்த்த பின்னர் அம்மாணவர்களிடமிருந்து **கல்விக் கட்டணத்தை (விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது) வசூலிக்க வேண்டாமென்று அனைத்து சுயநிதி பொறியியற் கல்லூரி / பாலிடெக்னிக் / HMCT கல்லூரி முதல்வர்**களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>பொறியியற் கல்லூரிகள் – விலக்கு அளிக்க வேண்டிய கட்டண விவரங்கள்</u>

மைய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டிய கட்டண விவரங்கள் (அரசு நியமித்த ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான சுயநிதி பொறியியற் கல்லூரிகளின் கட்டணக்குழு நிர்ணயித்த கல்விக் கட்டணங்கள்)

FEE STRUCTURE IN SELF FINANCING ENGINEERING COLLEGES

<table>
<tr><th>Sl. No.</th><th>Nature of Courses</th><th>Quota under which students admitted</th><th>Fee structure</th></tr>
<tr><td>1.</td><td>Non-Accredited Under-Graduate Engineering Courses (B.E / B.Tech. / B.Arch.)</td><td>Government</td><td>Rs.40,000/- per annum</td></tr>
<tr><td>2.</td><td>Accredited Under-Graduate Engineering Courses (B.E. / B.Tech. / B.Arch.)</td><td>Government</td><td>Rs.45,000/- per annum</td></tr>
<tr><td>3.</td><td>Non-Accredited Under-Graduate Engineering Courses (B.E / B.Tech/. / B.Arch.)</td><td rowspan="2">Other than Government</td><td rowspan="2">Rs.70,000/- per annum</td></tr>
<tr><td>4.</td><td>Accredited Under-Graduate Engineering Courses (B.E. / B.Tech. / B.Arch.)</td></tr>
<tr><td>5.</td><td>Non-Accredited courses in MBA / MCA / M.Sc. (5 years Integrated Courses)</td><td rowspan="4">Government and Other than Government quota</td><td>Rs.30,000/- per annum</td></tr>
<tr><td>6.</td><td>Accredited courses in MBA / MCA</td><td>Rs.36,000/- per annum</td></tr>
<tr><td>7.</td><td>Non-Accredited courses in M.E. / M.Tech. / M.Arch.</td><td>Rs.50,000/- per annum</td></tr>
<tr><td>8.</td><td>Accredited courses in M.E. / M.Tech. / M. Arch.</td><td>Rs.60,000/- per annum</td></tr>
</table>

பாலிடெக்னிக் கல்லூரிகள் – விலக்கு அளிக்க வேண்டிய கட்டண விவரங்கள்

## FEE STRUCTURE IN SELF FINANCING POLYTECHNIC COLLEGES

| Sl. No. | Category of Courses | Quota under which students admitted | Fee structure (per annum) |
|---|---|---|---|
| 1. | First year Diploma / Direct second year Diploma | Government | Rs.6,500/- |
| 2. | First year Diploma / Direct second year Diploma | Management | Rs.21,700/- |
| 3. | Hotel Management and Catering Technology (HMCT) | Government | Rs.13,500/- |
| 4. | Hotel Management and Catering Technology (HMCT) | Management | Rs.49,750/- |

மேற்படி திட்டத்தின் கீழ் கட்டண விலக்கு அளிக்கப்பட்ட தொகையை திரும்பப் பெறும் நெறிமுறைகள் பின்னர் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்படும்.

(ஒம்..) ரமேஷ் சந்த் மீனா,
தொழில் நுட்பக் கல்வி ஆணையர்

நகல் :

1) அரசு கூடுதல் தலைமைச் செயலர்
உயர்கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

2) அரசு செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

3) ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை 600 005

4) இயக்குநர்,
பழங்குடியினர் நலம்,
சேப்பாக்கம், சென்னை 600 005

14/9/12
தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக